பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: புரட்டாசி 30 (16—10—68) புதன் ★ வெளியூர்: ஐப்பசி 1 (17—10—68) வியாழன் [இதழ்: 100

அடுத்த பரிசுக் குலுக்கல் நவ. 20-ல்!

சென்னை, அக். 16—

பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு 'I, J' என்ற இரண்டு வரிசைப் பரிசுச் சீட்டுகளை வெளியிட்டிருக்கிறது.

'K,' 'L' என்ற மற்றும் இரு வரிசைச் சீட்டுகள், இன்னும் பத்து நாட்களில் வெளியிடப்படும்.

இந்தச் சீட்டுகள் நவம்பர் 20-ம் நாள் குலுக்கப்படும்.

நவம்பர் 13-ம் நாள் வரையில் ஏஜெண்டுகள் பரிசுச் சீட்டுகளைக் கருவூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுசீட்டுத்திட்டம்-- மக்களின் நல்லாதரவு

மத்திய அரசுக்கும் மன நிறைவு

ஆனாலும் ஆர்வம் குன்றிவிடும் என 'ஆரூடம்'

சென்னை, அக். 16—

தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டம் தமிழகத்தில் எடுத்த எடுப்பிலேயே மகத்தான வரவேற்பைப் பெற்று வெற்றிகரமாக நடைபோடத் துவங்கியுள்ளது கண்டு பல இடங்களிலிருந்தும் பாராட்டுக்கள் கிடைத்துவருகின்றன.

தமிழகத்தின் சமுதாயத் நலத் திட்டங்களை நிறைவேற்றும் நன்னோக்கத்தோடு அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட இத்திட்டம் பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்திருப்பதுடன், பிற மாநிலத்தாரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

முதல் பரிசுக் குலுக்கல், யாரும் எவ்விதக் குறையும் சொல்லமுடியாத அளவுக்கு வெற்றிகரமாக முடிந்திருக்கிறது. இதன்மூலம் மேலும் பலருடைய நன்மதிப்பையும் நன்னம்பிக்கையையும் இத்திட்டம் பெற்றிருக்கிறது.

பரிசு பெற்றவர்கள் அனைவருமே சாதாரண--நடுத்தர மக்களாக இருப்பது, இன்னும் இத்திட்டத்தில் நாட்டம் செலுத்தாதிருந்த மற்றவர்களின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

'தமிழக அரசின் இத்திட்டத்தை மத்திய அரசு ஆதரிக்குமா? இதற்கு அனுமதி வழங்குமா?' என்றெல்லாம் சிலர் ஐயப்பாட்டை எழுப்பினர்; 'இத்திட்டத்தை டெல்லி அரசு தடுத்து நிறுத்திவிடும்' என்றுகூடச் சிலர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கெல்லாம் பதிலளிக்கும்வகையில் இப்போது டில்லியிலிருந்து செய்தியொன்று வெளியாகியுள்ளது.

"பரிசுச் சீட்டுத் துறையில் தமிழகம் நல்லதோர் முன்னேற்றத்தைக் காட்டியிருக்கிறது. முதலாவது பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து தமிழக அரசு ரூ 50 இலட்சம் இலாபத்தை எதிர்பார்க்கிறது.

"அத்துடன், பரிசுகளில் வெற்றி பெறுவோரைத் தேர்ந்தெடுக்கும் முறை மூலம் தமிழக அரசு, மக்களிடையில் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது"

என்ற மனநிறைவு மத்திய அரசுக்கு ஏற்பட்டிருப்பதாகத் தகவல் ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

மாநிலங்களில் பரிசுச் சீட்டுக்கள் பரவுவதைக் கவனித்து வருவதற்கு மேல் மத்திய அரசு, வேறு எதையும் செய்ய உத்தேசிக்கவில்லையாம்!

பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கைவிட்டுவிடும்படியோ அல்லது அப்பழுக்கில்லாத திட்டமாக அதனை உருவாக்கும்படியோ ஆலோசனை கூறவும் செய்யாதாம்!

பரிசுச் சீட்டு சம்பந்தமாக மாநிலங்களுடன் மோதிக்கொள்ளுவதற்கும் மத்திய அரசு தயாராக இல்லையாம்!

ஆனால், பரிசுச் சீட்டு மோகம் மக்களிடையில், நாளாவட்டத்தில் மங்கி மறைந்துவிடுமென்று மத்திய நிதி அமைச்சகம் எதிர்பார்க்கிறதாம்.

மத்திய அரசின் பரிசுப் பத்திரங்கள் மூலம் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு, 'பரிசுச் சீட்டு' முறை வேருன்றாது என்று நிதி அமைச்சகம் எதிர்பார்க்கிறதாம்!

எந்நாளும் இதுபோல் மாநில அரசுகளுக்குப் பணம் குவியுமென்று நம்புவதற்கில்லையாம்!

அரசுக் கட்டிடங்களில் ஐ. நா. கொடி!

ஐ. நா. கொடியும்—இந்தியத் தேசியக் கொடியும் ஐ. நா. நாளான 24-ஆம் நாள் டில்லியிலும், மாநிலத் தலைநகரங்களிலும் உள்ள அரசுக் கட்டிடங்களில் பறக்க விடப்படும்.

மாநில அரசுகளும், மாவட்ட தலைமை இடங்களில் ஐ. நா நாளன்று இந்தக் கொடிகளைப் பறக்க விடலாம்.

சட்டமன்றக் கட்டிடங்களில் ஐ நா. கொடியைப் பறக்கவிடக் கூடாது.

உறுதிக்குத் திறவுகோல்!

"உடல் திறனிலிருந்து வருவதல்ல வலிமை; அது, வெல்ல முடியாத மன உறுதியிலிருந்தே வருகிறது."

—காந்தியார்

கணக்கில் தவறில்லை-- மிதப்பு வேண்டாம்!

சென்னை, அக். 16—

"கழகத்தின் வலிவையும், தோழமைக் கட்சிகளின் வலிவையும் சீர்தூக்கி -- எதிரியின் வலிவையும் கணக்கிட்டு -- 120 இடங்களிலும் காங்கிரசை நாம் நேருக்கு நேர் சந்திக்கிறோம்!

"கொள்கையும் குறிக்கோளையும் மனத்தில் வைத்து -- அந்த உறவை நிலைநாட்டிட அண்ணா அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் உணர்ந்து -- ஆதரவு பெற்ற வேட்பாளர்களுக்கு வெற்றி தேடித் தர வேண்டும்.

"வீழ்ந்த இடத்திலிருந்து காங்கிரசைத் தலைநிமிர முடியாமல் செய்த கூட்டணியை வகுத்தவர்கள் என்ற பூரிப்பும் பெருமிதமும் கொண்டு -- அண்ணா அவர்கள் கற்றுத்தந்த கட்டுப்பாட்டையும், கண்ணியத்தையும் மனத்தில்கொண்டு -- பெரும் வெற்றி தேடித்தரப் பாடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

"நாம் கணித்துள்ள கணக்குகள் அனைத்தும் ஒழுங்காகவே இருக்கின்றன; கணக்கில் தவறுகள் ஏதும் இல்லை. கெட்டால் நம்மால் கெட்டால்தான் உண்டு -- மிதப்பில் கெட்டால்தான் உண்டு.

"ஆமை-முயல் கதையை நினைவில் கொள்ளுங்கள்; 'நாம் எப்படியும் வென்றுவிடுவோம்' என்ற மிதப்பு வேண்டாம்! தூங்குவதானால் தூங்குங்கள் -- ஆனால், அக். 27-ந் தேதிக்குப் பிறகு தூங்குங்கள்! கோட்டைத் தாண்டிய பிறகு தூங்குங்கள்! அந்த அளவுக்குச் சுறுசுறுப்பாகப் பணியாற்றுங்கள்!"

--இரா. நெடுஞ்செழியன்

(102-வது வட்டத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்)

'சோம்பேறிகள்' என்று சொன்னவர்களுக்கா உங்கள் ஓட்டு?

சென்னை, அக். 16—

"'கொள்முதல் விலையை உயர்த்துங்கள்' என்று காங்கிரசுக்காரர்கள், விவசாயிகள் மத்தியில் கூறுகிறார்கள்; இங்கே வந்து, 'படி அரிசி போடுவதால் எவ்வளவு நட்டம் தெரியுமா?' என்று கூறுகிறார்கள்! இப்படி இரட்டை வேடம் போடுகின்றனர், காங்கிரசார்!

"'சென்னையில் வாழும் 'சோம்பேறி'களுக்கு ஒரு படி அரிசியா?' என்று -- தென்காசித் தேர்தலின்போது --- கேட்டவர்களும் காங்கிரசுக்காரர்கள்தான்; மாநகராட்சித் தேர்தலில், மக்கள் அவர்களுக்குத் தக்க பதில் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் உண்டு!"

---மு. கருணாநிதி

(வண்ணைத் தேர்தல் கூட்டத்தில்)

முதலமைச்சர் அண்ணாவை மீண்டும் சந்தித்தார் இந்திரா

இருவரும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தனர்

தமிழக நிலவரம் பற்றி அண்ணாவுக்கு அமைச்சர் கே. ஏ. மதியழகன் தகவல்

நியூயார்க், அக். 15—

அமெரிக்கா வந்துள்ள இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

ஐ. நா.-பேரவையில், திருமதி இந்திரா காந்தி பேசுகையில், அண்ணா அவர்கள் சிறப்பு விருந்தினர் இருக்கையில் அமர்ந்திருந்து அவரது பேச்சைக் கேட்ட செய்தி நேற்றே வெளியாகியுள்ளது.

ஐ. நா.-பேரவையில் அண்ணா ஒரு மணி நேரம் இருந்துவிட்டு வீடு திரும்பினர்.

ஐ. நா. இந்தியப் பிரதிநிதியான திரு. ஜி. பார்த்தசாரதியின் இல்லத்தில் அண்ணா அவர்கள் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருப்பது தெரிந்ததே.

திருமதி இந்திரா காந்தி ஐ. நா. அவையில் பேசியபிறகு, பார்த்தசாரதியின் இல்லத்துக்குச் சென்று அண்ணா அவர்களைச் சந்தித்தார். உடல் நிலை பற்றி விசாரித்தார். நெடுநேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

ஏற்கனவே மெமோரியல் மருத்துவமனையில் அண்ணாவை திருமதி இந்திரா காந்தி உடல் நலம் விசாரித்தது நினைவிருக்கலாம்.

அண்ணா உடல்நிலை

அண்ணா அவர்களின் உடல் நிலை நன்கு தேறிவருகிறது; உடற் பயிற்சிக்காக, நாள்தோறும் நடக்கிறார்; புத்தகங்களும் பத்திரிகைகளும் படிப்பதில் பெரும் பொழுதைக் கழிக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க. இராசாராம் அவர்களுடன் உணவமைச்சர் திரு. மதியழகன் தொடர்பு கொண்டு அண்ணா உடல்நிலை பற்றி விசாரித்தார்.

டெல்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாடு -- தமிழகக் கலெக்டர்கள் மாநாடு -- தமிழகத்திற்கு செகசீவன்ராம் வருகை -- ஆகியவை பற்றி திரு. மதியழகன் கூறி, இவை அனைத்தையும் அண்ணா அவர்களுக்கும் சொல்லுமாறு திரு. இராசாராம் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

சேலம் நகராட்சிக்கு அண்ணா நன்றி

சேலம், அக். 15—

'அறிஞர் அண்ணா உடல் நலமடைய வேண்டும்' என்று சேலம் நகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி, அமெரிக்காவில் உள்ள அண்ணா அவர்களுக்கு அனுப்பிவைத்தது.

அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அண்ணா அவர்களின் சார்பில் திரு. இரா. செழியன்,

(4-ம் பக்கம் பார்க்க)

நியாயத்தின் பக்கம் வந்து நின்று கேட்கிறேன்

சனநாயகத்தைக் காக்க 'உதயசூரிய'னுக்கு வாக்களியுங்கள்

சென்னை நகர வாக்காளர்களுக்கு பரூக் மரைக்காயர் வேண்டுகோள்

சென்னை, அக். 16 —

"நான் நன்கு யோசித்துச் சொல்கிறேன் ; நீங்களெல்லாம் உதயசூரியன் சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும் ; முன்பு காங்கிரசுக்கு ஓட்டுக் கேட்கவந்த நான், இப்போது உதயசூரியனுக்குக் கேட்கிறேன் என்றால், தீர யோசித்தே கேட்கிறேன் -- புதிதாகத் தி. மு. கழகத்தில் சேர்ந்திருக்கிறேன் என்பதற்காக அல்ல"

என்று, முன்னாள் புதுவை முதல்வர் திரு. பரூக் மரைக்காயர், சென்னையில் நடந்த தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

பொதுப் பணி அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் முன்னிலையில் கழக உறுப்பினராகப் பதிவு செய்துகொண்டு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது :—

இன்று நான் கழகத்தில் அதிகார பூர்வமாக உறுப்பினராகச் சேருகிறேன் ; ஆனால் கழகத்தில் சேருவது என்பது இரண்டு மாதங்கட்கு முன்பே எடுத்த முடிவாகும்.

கழகத்தில் நான் சேருவது, ஒரு தற்காலிக ஏற்பாடு அல்ல ; நான் காங்கிரஸ் முதலமைச்சராகப் புதுவையில் இருந்தபோது என்மீது சுமத்தப்பட்ட பெரிய குற்றம், நான், 'தி. மு. கழகத்தவன்' என்பது தான்; ஆனால், இதைத் தைரியமாக அவர்களால் சொல்ல முடியவில்லை -- அதனால் மறைக்கப்பட்டது.

புதுவை மாநிலம் தமிழகத்தோடு ஒட்டியுள்ள மாநிலம்; அண்மையில் வாழ்கிறோம்; அரசியல்— பொருளாதாரம் -- மொழி முதலியவைகளில் தமிழகத்தினரோடு ஒட்டி வாழ்கிறோம்.

நான் புதுவை முதலமைச்சராக இருந்தபோது, மக்களின் நன்மையைக் கருதிப் பல பிரச்சினைகளில் தமிழக அரசுடன் ஒத்துப்போனேன்; அதற்குக்கூட அப்போது வேறு 'கலர்' தரப்பட்டது; ஆனால், அதனை நான் பொருட்படுத்தவில்லை.

ஒரு சமயம் தமிழக அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள், புதுவைக்கு வந்திருந்தார் ; அவருக்கு எல்லா அமைச்சர்களின் சார்பிலும் ஒரு விருந்து அளிக்கப்பட்டது; அதுகண்ட சிலர், 'நீ கழகத்தில் சேர்ந்துவிட்டாயா ?' என்று என்னிடம் கேட்டனர் ; பிறகு நான் டெல்லிக்குப் போயிருந்தேன்; உள்துறை அமைச்சர் சவான்கூட இதுபற்றிக் கேட்டார் ---'நீ கழகத்துடன் அதிகத் தொடர்பு கொள்கிறாய்' என்றார்.

நான் சவானிடம் சொன்னேன்-- 'நீங்கள் அந்த முடிவுக்கு வந்தால் அத்றகாக நான் கவலைப் படப்போவதில்லை ; மக்கள் என் பக்கம் இருக்கிறார்கள் ; அந்தச் சான்று போதும்' என்று !

நான் 10 மாதம்தான் புதுவை முதல்வராக இருந்தேன் ; காங்கிரசு முதல்வராக நான் இருந்தாலும், தி. மு. கழக ஆட்சியினர் நல்ல ஒத்துழைப்புத் தந்தார்கள்.

எங்கள் மாநில வரவு—செலவுத் திட்டத்தில் சில காரியங்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது ; அந்தக் காரியங்கள், இரண்டு மாநிலங்களும் சேர்ந்து செயல்படக் கூடியவை; ஆனால், அந்தவகை செலவினங்களுக்குத் தமிழகம் நிதி ஒதுக்கும் சூழ்நிலையில் இல்லை ; இதுபற்றி இங்கே வந்து கருணாநிதி அவர்களிடம் சொன்னேன் ; 'நாங்கள் ஒதுக்கியிருப்பது டெல்லிப் பணம்; நீங்களும் அதற்கு ஆதரவாக பணம் ஒதுக்காவிட்டால், அந்தப் பணம் டெல்லிக்கே போய்விடும்' என்றேன்; உடனடியாக அதற்குக் கருணாநிதி ஏற்பாடு செய்தார்.

இதுபோல எத்தனையோ காரியங்கள் நடந்திருக்கின்றன ;

'காரைக்காலில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டும்' என்று அப்போது உதகையில் இருந்த அண்ணா அவர்களிடம் கேட்டேன் ; 'நெடுஞ்செழியனைப் பாருங்கள் ; வேலையைத் தொடருங்கள்' என்றார் ; வேலை, விரைவாக நடைபெற்றது; சட்ட மன்றம் வராமலேயே கல்லூரி வந்தது !

நான், தி. மு. கழகத்தில் சேருவது பற்றி யாரும் குறை சொல்ல முடியாது ; காமராசர் முதல் மற்றவர்கள் அனைவரும் என் முன் வரவே வெட்கப்படுவார்கள் -- அவர்கள் மனச்சாட்சியே அவர்களை உறுத்தும் !

டெல்லிக்கு நான் சென்றிருந்த போது, 'நீ திரும்ப காங்கிரசுக்கே வந்துவிடு' என்றார்கள் ; ஆனால், நான் காங்கிரசிலிருந்து வெளியேறியதற்குப் பலர் பாராட்டினார்கள் ; 'புதுவையில் தி மு. கழக ஆட்சியை நீங்கள் அமைக்க வேண்டும்' என்று வாழ்த்தினார்கள்.

'வயதில் குறைந்த இளைஞராக அவைத்தலைவர் பதவி பெற்றாய் ; இளம் வயதில் முதலமைச்சராகப் பதவியில் இருந்தாய்; எதிர்க் கட்சித் தலைவராக இருந்தாய்; அப்படிப்பட்ட நீ, ஓர் அகில இந்தியக் கட்சியை விட்டுவிட்டு மாநில கட்சிக்கு (தி.மு.க.) ஏன் போகிறாய் ?' என்றுகூடச் சிலர் கேட்டார்கள்.

"ஆமாம் ; இது மாநிலக் கட்சி தான் ; அன்று தெற்கிலிருந்து தான் நாகரிகம் வடக்கே போயிற்று ! அதுபோல ஒரு நாள், மாநிலக் கட்சியாக இருக்கும் தி. மு. கழகம், டெல்லி ஆட்சியைப் பிடிக்கும்" என்று அவர்களிடம் சொன்னேன்.

"தி. மு. கழகம் மாநிலக் கட்சியாக இராது ; வருங்காலத்தில் அகில இந்தியக் கட்சியாக ஆகும்" என்றும் சொன்னேன்.

இந்திய அரசியல் சட்டப்படி நாம் வாழ்கிறோம்; அதன் அடிப்படையில் தேர்தல் வருகிறது ; அந்தந்தக் கட்சிகளுக்கு ஓட்டுப் போடுகிறோம் ; இன்று இந்தியாவில் மூத்த கட்சியாக இருக்கும் கட்சியான காங்கிரசு, சனநாயகத்தை ஒழிக்கப் பார்க்கிறது !

இதற்குச் சான்றாக எங்கள் மாநிலப் பிரச்சினை இருக்கிறது ; 'காங்கிரசுக்கு ஒரு நியாயம் -- மற்றவர்களுக்கு ஒரு நியாயம்' என்ற போக்கில் காங்கிரசு செய்யப்படுகிறது !

'தமிழகச் சட்டமன்ற அவைத் தலைவர் கட்சிப் பிரசாரத்தில் ஈடுபட்டார்' என்கிறார்கள் ; எங்கள் மாநில அவைத் தலைவர் சண்முகம்தான் அங்கே 'அரசியல்' செய்தவர் ! ஆனால் அதைப்பற்றி அவர்கள் மவுனம் சாதித்தார்கள் !

இன்னும் ஆறு மாதங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி முடிந்து புதுவையில் தேர்தல் வரும் ; அந்தத் தேர்தல் உங்களையெல்லாம் ஆச்சரியப்படுத்தும் வகையில் நிலைமை மாறும் !

இங்கு இருக்கும் கூட்டணிபோல அங்கேயும் ஒரு கூட்டணி ஏற்பட்டு ஒன்றுபட, சூழ்நிலை இருக்கிறது !

காங்கிரசு ஆட்சிக்கு எப்படித் தமிழகத்தில் முடிவு ஏற்பட்டதோ, அப்படிப் புதுவையிலும் ஒரு முடிவு ஏற்படும் ! புதுவைக்கும் — தமிழகத்திற்கும் பந்த பாசம் இருக்கிறது !

நாங்கள் உங்கள்மீது அக்கறை கொண்டிருக்கிறோம் ; அது போல நீங்களும் எங்கள்மீது அக்கறை கொள்ளுங்கள் -- நியாயத்தின் பக்கம் அக்கறை கொள்ளுங்கள் !

நான் டெல்லிக்குச் சென்றபோது குடியரசுத் தலைவர் ஆட்சிக்குக் காரணம் கேட்டேன்; தலைகுனிந்தார்கள்; 'எப்படியோ, எதிர்க் கட்சி ஆட்சியை வரவிடாமல் ஒழித்துவிட்டோம்' என்று இருக்கிறார்கள்; எதிர்க் கட்சி ஆட்சியை அவர்கள் ஒழிக்கவில்லை - அங்கே காங்கிரசைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டார்கள் ! இதை அவர்கள் தேர்தலின்போது காண்பார்கள் !

தி. மு. கழகம் புதுவையில் போட்டியிடப்போகிறது ! புதுவையில் தி மு. கழக ஆட்சி ஏற்படப் பாடுபடுவேன் !

இதுவரையில் நான் மூவண்ண (காங்கிரசு)க் கொடியின்கீழ் நின்று பேசினேன்; இன்று இருவண்ண (தி.மு.க.)க் கொடியின் கீழ் நிற்கிறேன் ! நியாயத்தின் பக்கம் -- நேர்மையின் கீழ் நிற்கிறேன் !

வேறு எந்த ஆசை கொண்டும் நான் கழகத்தில் சேரவில்லை ! என் நிலையை உயர்த்திக்கொள்வதற்காகச் சேரவில்லை ! பதவி பெறுவதுதான் முக்கியம் என்றால், எப்படியோ பதவி பெற்று இருப்பேன் ! பதவியை உதறி வந்தவன் -- அதைவிட்டு வெளியேறியவன் !

இந்திய சனநாயகம் தழைக்கக் கூட்டணிக்கு ஆதரவு தாருங்கள் ! மாநகராட்சித் தேர்தலில் தி.மு. கழகத்தையும், தோழமைக் கட்சிகளையும் ஆதரித்து சனநாயகத்தைக் காப்பாற்றுங்கள் !

'எதிர்க் கட்சி (காங்கிரசு) சார்பில் மக்கள் இப்போது இருக்கிறார்கள்' என்ற எண்ணம், சில காங்கிரசுக்காரர்களுக்கு இருக்கிறது.

தென் சென்னை இடைத் தேர்தல் நடந்தபோது, நான் இங்கே காங்கிரசுக்கு ஓட்டுக் கேட்க வந்தேன்; அப்போது காங்கிரசுக்காரர்கள் என்னிடம் சொன்னார்கள்—'மக்களிடம் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது; நடுத்தர வகுப்பினர் காங்கிரசுக்கே ஓட்டுப் போடுவார்கள்' என்று ! ஆனால் என்ன ஆயிற்று -- காங்கிரசு தோற்றது !

இந்த மாநகராட்சித் தேர்தலில் சில இடங்களில் காங்கிரசு 'டெபாசிட்'டை இழக்கும் என்று சொன்னார்கள்; அந்த நிலைமை தான் இருக்கிறது !

'யார் ஆளுகிறார்கள்' என்பது முக்கியமல்ல; 'எப்படி ஆளப்படுகிறார்கள்' என்பதுதான் சனநாயகத் தத்துவம் ! மக்களின் பயனைப் பார்க்கும் அரசியல் நுண்ணறிவு வர வேண்டும் !"

இருபதாண்டு ஆட்சியில் பட்டபாடு போதாதா?

ஏழைமக்கள் மீண்டும் காங்கிரசை நம்புவரா ?

மக்களாட்சியைக் காக்க தி. மு. க.--- கூட்டணியினருக்கு வாக்களியுங்கள்

மாநகர வாக்காளர்களுக்குக் கேரளக் கல்வியமைச்சர் முகம்மது கோயா வேண்டுகோள்

சென்னை, அக். 15—

கேரளக் கல்வியமைச்சர் திரு. முகம்மது கோயா அவர்கள் சென்னையில் நடந்த மாநகராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு தி. மு. க. -- தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றிபெறவும், காங்கிரசு வேட்பாளர்கள் முறியடிக்கப்படவும் வேண்டியதன் அவசியத்தை விளக்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

தங்களுக்குள்ளே இருக்கும் குழப்பதை நீக்கிக்கொண்டு ஓர் அமைப்பைச் சீராக நடத்திச் செல்ல முடியாத இவர்கள் தான், ஊர் மக்களிடம் வந்து, மீண்டும் தங்களை ஆட்சியில் அமர்த்துமாறு கோருகின்றனர்.

எதற்காக இவர்களை ஆட்சியில் அமர்த்துவது ? வடவர், இந்தி என்றாலும், அரிசி இல்லை என்றாலும், தலையாட்டிப் பொம்மைகளைப்போல 'ஆமாம்' போடுகிற இவர்கள், மீண்டும் ஆள வந்தால் யாருக்கு என்ன நன்மை ?

இருபதாண்டுக்காலம் இவர்களுடைய ஆட்சியில் மக்கள் பட்ட துன்பம் போதாதா ? இந்தத் துன்பத்திலிருந்து மீளவே கூட்டணி அமைத்துக் காங்கிரசைக் கீழே இறக்கினர் மக்கள் ! போலீசு மற்றும் அதிகாரவர்க்கத்தின் கெடுபிடிகளிலிருந்து ஏழை மக்களுக்கு விடுதலை கிட்டியுள்ளன -- இதை மீண்டும் இழக்க மக்கள் ஒருநாளும் ஒப்பமாட்டார்கள் !

அமெரிக்காவில் சிகிச்சை முடிந்து ஓய்வெடுத்துவரும் மக்களின் மதிப்பைப்பெற்ற அறிஞர் அண்ணா மனம் மகிழும் வண்ணம் தி. மு. கழகமும், லீகும், மற்றத் தோழமைக் கட்சியினரும் தங்களுக்குள்ளே ஒற்றுமையை உறுதிப்படுத்தி வெற்றி தேடிட வேண்டும். மக்களாட்சி முறையில் சனநாயகத்தில் தாங்கள் கொண்டுள்ள அசையாத நம்பிக்கையினை மக்கள் மீண்டும் தெரிவித்தாக வேண்டும்.

'வேட்பாளர் யார்' என்பதைக் காட்டிலும், எந்தக் கொடியின் கீழ் அவர் நிற்கிறார் என்பதே முக்கியம் !

'சுயேச்சை' என்பதெல்லாம் இந்த நூற்றாண்டில் செல்லாது ! அவர்கள் சாதிக்கப்போவது என்ன ? அவர்களது கொள்கை -- கோட்பாடுகள் என்ன ? மக்கள் இதை அறிவார்கள் !

பசும் பொன்னுக்கும் -- தங்கப் பூச்சுக்கும் உள்ள வேறுபாட்டினை அறியும் ஆற்றல் உள்ளவர்களே நம் மக்கள் !

காங்கிரசின் பணமோ, அவர்கள் கையில் சிக்கியுள்ள கோடரிக் காம்புகளோ மக்கள் சக்தியின் முன் முறியடிக்கப்படுவது திண்ணம் !

'கூட்டணித் தோழர்கள் அனைவருக்கும் வெற்றி கிட்டட்டும்' என்ற என் விழைவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களின் இரத்தத்தால் உருவான தென்னவர் அரசை அழிக்க வடபுலத்து பணத் திமிங்கலங்கள் தந்த பணத்தோடு வருகிறது காங்கிரசு ! மக்கள் அதற்கு ஒரு சிறிதும் இடமளியாமல், தாங்கள் பெற்ற மக்கள் அரசைக் காத்திட வேண்டும். இதற்கு உறுதுணையாக வரவிருக்கும் மாநகராட்சித் தேர்தலில், தி. மு. க, மற்றும் கூட்டணி வேட்பாளர்களையே ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

தமிழகத்தில் மற்றொரு புதிய தொழிற்சாலை

துணைக் குடியரசுத் தலைவர் துவக்கிவைக்கிறார்

சென்னை, அக். 16—

தமிழகத்தில், புது வகைத் தொழிற்சாலை ஒன்று நாளை மறுநாள் தனது உற்பத்தியைத் துவங்குகிறது.

பிரிட்டானியா பிஸ்கெட் நிறுவனத்தின் புதிய தொழிற்கூடத்தையும், அலுவலகங்களையும், சென்னையில் துணைக் குடியரசுத் தலைவர் டாக்டர் வி. வி. கிரி திறந்துவைக்கிறார்.

இந்தத் திறப்பு விழா அக். 18-ஆம் நாள், ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் தலைமையில் நடைபெறுகிறது.

இத்தகைய தொழிற்சாலை அமைவது தமிழகத்திலேயே இதுதான் முதலாவதாகும்.

இத்தொழிற்சாலையில் பரீட்சார்த்தமாக சிறிது நாட்களுக்கு முன்னர் உற்பத்தி செய்து பார்க்கப்பட்டது.

பிரிட்டானியா பிஸ்கெட் நிறுவனம், கடந்த 50 ஆண்டுக்கு மேலாக இந்தியாவில் உற்பத்தியையும், விற்பனையையும் நடத்தி வருகிறது.

சிறந்த ஊட்டச் சத்துமிக்க உணவுப் பண்டங்களையும், பிஸ்கெட்டுகளையும் அது உயர்ந்த முறையில் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு ஏற்ற தின்பண்டங்களைத் தயாரிப்பதுடன், வளரும் குழந்தைகளுக்கான தனி வகை பிஸ்கெட்டுகளையும் தயாரித்துவருகிறது.

ரூபாய்ச் செலாவணி இல்லாத நாடுகளிடமிருந்து இந்திய பிஸ்கெட் உற்பத்தியாளர்கள் ஈட்டும் அந்நியச் செலாவணியில் மூன்றில் ஒரு பங்கை இந்த நிறுவனம் தனது ஏற்றுமதிமூலம் ஈட்டுகிறது.

இலங்கை அகதிகட்கு மறுவாழ்வு

தமிழக அரசின் திட்டம்---அதிகாரி விளக்கம்

மதுரை, அக். 16—

"இலங்கை அகதிகளின் முதல் தொகுதியினர் அடுத்த மார்ச் மாதம் முதல் ஜூன் மாதத்திற்குள் இந்தியாவுக்கு வருவார்கள்; அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன"

என்று தமிழக அரசின் உள்துறைச் செயலாளர் ஏ. வெங்கடேசன், செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ரப்பர், தேயிலைக் தோட்டத் தொழில், பால்பண்ணைத் தொழில், நிலக் குடியேற்றம் உட்பட சுமார் 17 திட்டங்கள் இலங்கை அகதிகள் மறுவாழ்வுக்காக வகுக்கப்பட்டு வருகின்றன. சலவைத் தொழில் (லாண்டரி), தையல் தொழில் போன்றவற்றில் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது பற்றியும் பரிசீலனை செய்யப்படுகிறது.

அடுத்த ஆண்டில் மட்டும் சுமார் 35,000 அகதிகள் இந்தியாவுக்கு வருவார்கள்.

அகதிகள் எவ்வளவு பணம் கொண்டுவரலாம் என்பது பற்றிய ஒப்பந்தம் இன்னும் ஏற்படவில்லை. இலங்கை—இந்திய அரசாங்கங்களுக்கிடையே இந்தப் பிரச்சினை பற்றிப் பேச்சு நடைபெற்று வருகின்றது.

மதுரை மாவட்டத்தில் போடிநாயக்கனூர், கூடலூர் ஆகிய இடங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசத்திலும் சுமார் 3,750 ஏக்கர்களில் தேயிலைத் தோட்டங்கள் அமைப்பது பற்றித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. போடிநாயக்கனூர் பகுதியில் சுமார் 750 ஏக்கர் நிலம் இப்போது தயாராக இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 2,500 ஏக்கர்களில் ஒரு ரப்பர் தோட்டத்தை ஏற்படுத்துவது பற்றிய திட்டமும் பரிசீலனையில் இருக்கிறது.

காலியாக உள்ள பயிரிடத்தக்க காட்டு நிலங்கள்பற்றிய விவரங்களைத் தருமாறு வனத் துறை கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. நிலத்தைப் பண்படுத்தி, குடியேற்றத் திட்டத்திற்கு இந்த நிலங்களைப் பயன்படுத்தலாம்."

சிவகாசி--நெல்லிக்குப்பம் மஜீத் நினைவு மன்றம்

6—10—68-ல், சிவகாசி–நெல்லிக்குப்பம் மஜீத் நினைவு மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல் நகர தி. மு. க. அவைத் தலைவர் கா. மு. மதார் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—

அவைத் தலைவர் : எஸ். பி. எட்வர்ட் சாமுவேல்; செயலாளர் : தாடி அபுதாலிப்; துணைச் செயலாளர் : அ. மு. சர்புதீன்; பொருளாளர் : எம். எஸ். லுக்மான்; செயற்குழு உறுப்பினர்கள் : சே. அ. ரசாக், கார்மேகம், எம். சாகுல் அமீது, இ. எம். முஸ்தபா, எம். சலிக்குஸ்சமான், எஸ். மைதீன், கே. எஸ். சர்புதீன்.

குடியேற்றம் 13-வது வட்ட அம்பேத்கார் படிப்பகம்

குடியேற்றம் நகர் 13-வது வட்டம் ஆர். எஸ். நகர் டாக்டர் அம்பேத்கார் படிப்பக நிர்வாகிகள் தேர்தல், 22—9—68-ல் திரு. டி. தாமோதரம் தலைமையில் நடைபெற்றது; நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : சி. அண்ணாமலை; செயலாளர் : ஜே. கே. நடேசன்; துணைச் செயலாளர் : ஆர். சந்திரன்; பொருளாளர் : பி. கோவிந்தன்; செயற்குழு உறுப்பினர்கள் :—பி. எம். மணி, எம். ஆறுமுகம், டி. கிருட்டினன், எம். தம்பி, டி. தாமோதரம், கே. சுந்தரராசன், ஈ. செல்வராஜ்.

தனியார் பள்ளி ஆசிரியர்கட்கு ஓய்வு கால ஊதியம்

துவக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, ஆங்கிலோ - இந்தியப் பள்ளி, தனிப் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும்; மாற்றப்பட்ட பகுதிகளிலிருந்து (கன்னியாகுமரி மாவட்டம்—செங்கோட்டை தாலுகா) ஓய்வு பெற்றவர்களுக்கும்; மூன்று உதவி பெறும் கல்லூரிகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் ஆசிரியர் ஓய்வு கால நிதியுதவித் ('பென்ஷன்') திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

முதல் பிரிவில் 1955 ஏப்ரல் முதல் நாளுக்கு முன்பு ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் 1968 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 'பென்ஷன்' பெற உரியவர்களாவார்கள். ஆனால் அந்த நாளுக்கு முந்தைய கால பாக்கி கிடைக்காது.

இரண்டாவது பிரிவு ஆசிரியர்களில் 1956 நவம்பர் முதல் நாள் அல்லது அதற்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கும் 'பென்ஷன' உண்டு; ஆனால் 1968 மார்ச் முதல் நாளுக்கு முந்தைய கால பாக்கி கிடைக்காது.

மூன்ருவது பிரிவில் 1955 ஏப்ரல் முதல் நாளுக்கு முன்பு ஓய்வுபெற்றவர்களும், 1965 ஏப்ரல் முதல் நாளுக்கும்—1962 சனவரி முதல் நாளுக்கும் இடையே ஓய்வு பெற்றவர்களும் 1968 மார்ச் முதல் நாளிலிருந்து 'பென்ஷன்' பெறுவார்கள்; 1968 மார்ச் முதல் நாளுக்கு முன்புள்ள காலத்துக்கான பாக்கி கிடைக்காது.

1955 ஏப்ரல் முதல் நாளுக்கு முன்பு ஓய்வு பெற்ற உள்ளாட்சிக் கழகங்கள் -- தனியார் நிர்வாக நிறுவனங்கள் கீழுள்ள எல்லா வகை ஆசிரியர்களுக்கும் 'பென்ஷன்' கொடுக்கப்பட வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

கெசட் பதிவு பெற்ற அதிகாரிகட்கு சிறை

புதுடில்லி, அக். 16—

இந்த ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் மத்திய புலன் விசாரணைப் பிரிவின் தனிப் போலீசு நிறுவனம் 103 வழக்குகளை, தொடர்புடைய இலாகாக்களுக்கு அனுப்பியது; 33 கெசட் பதிவு அதிகாரிகளும் வேறு 100 அரசு ஊழியர்களும் இவற்றில் தொடர்புபடுத்தப்பட்டிருந்தனர்.

71 வழக்குகளில் இலாகா மட்டத்தில் தண்டனை அளிக்கப்பட்டது; 14 கெசட் பதிவு அதிகாரிகளும், வேறு 80 அரசு ஊழியர்களும் தண்டனைக்குள்ளாயினர்; ஒரு கெசட் பதிவு அதிகாரிக்கு இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

அரசுப் பணத்தைக் கையாடியதற்காகவும், சான்றேடுகளில் பொய்க் கணக்கு எழுதியதற்காகவும் செய்தித் துறையைச் சேர்ந்த பொருளாளர் ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிருர்.

மேற்கத்திய இரயில்வேயின் போக்குவரத்து சிக்னலர் ஒருவர், இரயில்வே கணக்குப் புத்தகத்தில் பொய்க் கணக்கு எழுதியதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிருர்.

சென்னை 97-வது வட்ட மதியழகன் மன்றம்

சென்னை 97-வது வட்ட தி.மு.க. செயலாளர் ஒய். எம். சேகர் தலைமையில் 'மதியழகன் மன்றம்' என்ற அமைப்பு ஏற்படுத்தி நிர்வாகிகள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத்தலைவர் : க. சுப்பிரமணியம்; செயலாளர் : சி. முனுசாமி; துணைச் செயலாளர் : அ. நடராசன்; பொருளாளர் : கு. வைத்தியலிங்கம்; மற்றும் 9 செயற்குழு உறுப்பினர்கள்.

குடிநீர்க் குழாய்த் துவக்க விழா

சேலம் 18-வது வட்டத்தில் நதிமுல்லா மக்கான் தெருவில் அமைக்கப்பட்டிருந்த குடிநீர்க் குழாயை திரு. எஸ். ஏ. அன்புக்கரசு தலைமையில் திருமதி பேகம் கான் பி ஏ பி.டி. திறந்து வைத்துப் பேசினர்.

மற்றும் தோழர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், ஏ. அமானுல்லா கான் எம்.சி., பியாரேபாய் ஆகியோர் வட்ட நகரமன்ற உறுப்பினர் பி. எஸ். மாணிக்கம் அவர்களின் பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

திரு. பி. எஸ் மாணிக்கம் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

விழாக் குழுத் தலைவர் எம். கே. முகம்மது கவுஸ், விழாவுக்கு வருகைதந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தென்காசி 7-வது வட்ட கருணாநிதி மன்றம்

தென்காசி 7-வது வட்டம் கலைஞர் கருணாநிதி மன்றம் அமைப்புக் கூட்டம் 22—9—68 அன்று நகர தி. மு. க. அவைத் தலைவர் திரு முருகேசன் முன்னிலையில் நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் வருமாறு :—

அவைத் தலைவர் : என். என். நாகூரப்பா; செயலாளர் : என். அமது பாட்சா; துணைச் செயலாளர் : பி. பிச்சை; பொருளாளர் : எம். சாகுல் அமீது; நகரக் கழகப் பிரதிநிதி : எம். நத்தடு பாவா; செயற்குழு உறுப்பினர்கள் : எம். எஸ். சுல்தான், எம். எஸ். மைதீன், பி. முகம்மது, வேலாயுத வாத்தியார், அ. ரா. அய்யம்பெருமாள், மு. கந்தசாமி, என். முகைதீன் பாட்சா, திவான்சா.

முன்னாள் படைவீரர் குடும்பங்கட்கு உதவி

மறுவாழ்வு நிதியிலிருந்து மானியம்

சென்னை, அக். 15—

முன்னாள் படைவீரர் மறுவாழ்வுக்கான தனி நிதியின் மாநில நிர்வாகக் குழு, தமிழக ஆளுநரின் தலைமையில்கூடி, பல மானிய உதவிகளுக்கு அனுமதியளித்தது.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவோர் ஒவ்வொருவருக்கும் ரூ. 15-க்கு மேற்படாத தொகையைப் புத்தகப் படியாகவும், சீன, பாகிஸ்தானியப் படையெடுப்பின்போது தாய் நாட்டுக்காகப் போரிட்டு உயிர் துறந்த வீரர்களின் மனைவியர்கள் ஒவ்வொருவருக்கும், புதிய வீடுகள் கட்டிக்கொள்ளவோ, பழைய வீடுகளைப் பழுது பார்க்கவோ, அல்லது அவற்றை விரிவுபடுத்தவோ ரூ 5,000-க்கு மேற்படாத தொகையை மொத்த மானியமாகவும், போரில் உயிர்துறந்த வீரர்களின் பெண்கள் திருமணம் செய்துகொள்ள ஒவ்வொருவருக்கும் ரூ. 1,500-க்கு மேற்படாத தொகையை மானியமாகவும் குழு அங்கீகரித்தது.

சென்னை நகரில் ஒலி பெருக்கிகள், பேப்பர் கண்டன்சர்கள் ஆகியவற்றையும், சேலம் மாவட்டத்தில் கால்நடை—கோழித் தீனியையும் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கான திட்டங்களைக் குழு கொள்கையளவில் அனுமதித்தது.

முன்னாள் படைவீரர்களின் குழந்தைகள் சம்பந்தமாக, 1968-69 கல்வி ஆண்டிலிருந்து சட்டம் படிக்கும் மாணவர்களுக்குப் படிப்பு மற்றும் தனிக் கட்டணங்களும்; 1968—69 கல்வி ஆண்டுக்குப் புதுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்.சி, போன்றவற்றில் பயிலும் மாணவர்களுக்குப் படிப்பு மற்றும் தனிக் கட்டணங்களும்; அனுமதிக்கப்பட்டுள்ள விடுதிகளில் தங்கிப் படிக்கும், தனி நிதியிலிருந்து சம்பள உதவி பெறத் தகுதியுள்ள மாணவர்களுக்கு 1968—69-ஆம் ஆண்டுச்குப் புத்தகப் படியும், உணவுக் கட்டணங்களும் வழங்குமாறு நிரந்தரத் துணைக் குழு செய்திருந்த பரிந்துரையைக் குழு ஏற்றுக் கொண்டது.

போரில் மாண்ட வீரர் ஒருவரின் தாய்க்கு, வீடு கட்டிக்கொள்ள ரூ. 5,000 மானியமும், முன்னாள் படை அதிகாரி ஒருவருக்கு, டாக்சி நடத்த ரூ. 25,000 கடனும் குழுவால் அனுமதிக்கப்பட்டன.

வேளாண்மைக்குக் கடன் வழங்க நிரந்தரத் துணைக் குழு செய்த பரிந்துரையையும் குழு ஏற்றுக்கொண்டது; ஆனால் இந்தக் கடன் பொதுவாக அரசின் உதவிக்கு உறுதுணையாக இருக்கும்.

நடைமுறை ஆண்டுக்கு ரூ. 450 கோடி

விவசாயிகட்கு வழங்கும் கடன் வசதி

புதுடில்லி, அக். 16—

1973—74-ம் ஆண்டு வாக்கில் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயிகளுக்கு ரூ. 820 கோடி கடன் வசதி அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ரூ. 752 கோடி குறுகியக் காலக் கடனாகவும், ரூ. 68 கோடி நடுத்தரக் காலக் கடனாகவும் வழங்கப்படும்.

1962—63-ல் ரூ. 257 கோடி மட்டுந்தான் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குறுகிய கால -- நடுத்தரக் காலக் கடனாக வழங்கப்பட்டது; 1967—98-ல் இது ரூ 400 கோடியாக இருந்தது; 1968—69-ல் இது 450 கோடியாக இருக்கும் என்று தெரிகிறது.

நான்காவது திட்ட காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 700 கோடி நீண்டகாலக் கடனாக வழங்கும் என்று எதிர்பார்க்கிருர்கள்.

சென்ற இரண்டு ஆண்டுகளில் கடன் வசதிக் கொள்கைகளும், நடைமுறைகளும் எளிதாக்கப்பட்டன.

உரிமை வேண்டின் கடமையைச் செய்க!

உத்தமர் காந்தியின் கட்டளை

"கடமைகளைச் சரிவரச் செய்வோருக்குத்தான் உரிமைகள் தாமாகவே வருகின்றன. ஒரே ஓர் உரிமைக்காக உயிர் வாழ்ந்து, அதற்காக உயிர்த் தியாகம் செய்யலாம்; அதுதான் கடமையைச் செய்வதற்கான உரிமை!

"உண்மையில், கடமைதான் உரிமைகளை உருவாக்குகின்றது. நமது கடமைகளைச் சரிவரச் செய்தோமேயானல் உரிமைகளைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை. கடமைகளைச் செய்யாமல் உரிமைகளைத் தேடிச் சென்ருல், அவை நம்மைவிட்டுத் தப்பி ஓடிவிடும்! நாம் தொடர்ந்து செல்லச் செல்ல அவை மேலும் தொலைவில் சென்றுவிடும்!"

என்று, காந்தியடிகள் வலியுறுத்தியுள்ளார். ஒழுங்குக் கட்டுப்பாடு குறித்து அவர் மேலும் எழுதியுள்ளதாவது :—

மகத்தான -- நிலையான சாதனைகளைச் செய்வதற்கு இரும்பு போன்ற அசையாத ஒழுங்குக் கட்டுப்பாடு வேண்டும். வாக்குவாதத்தின் மூலம் அந்த ஒழுங்குக் கட்டுப்பாடு வந்துவிடாது. நியாய வாதத்தையோ, காரிய காரணத் தொடர்பையோ நாடினாலும், இது உருவாகிவிடாது. 'எதிர்ப்பு' எனும் பள்ளிக்கூடத்தில்தான் ஒழுங்குக் கட்டுப்பாடு எனும் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தியாகம், ஒழுங்கு, சுய கட்டுப்பாடு ஆகியவை இல்லாவிடில் கழுவாயும் இல்லை -- நம்பிக்கையும் இல்லை.

உண்மையான ஒரு படைவீரன் முன்னேறிச் செல்லும்போது, இறுதியில் எப்படி வெற்றி கிடைக்கப் போகிறது என்பது பற்றி விவாதித்துக் கொண்டிருக்கமாட்டான்; தனது பணிவான பங்கைச் சரிவரச் செய்தால் எப்படியாவது போரில் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு. இந்த நம்பிக்கையோடுதான் நம்மில் ஒவ்வொருவரும் பணிபுரிய வேண்டும்.

வருங்காலம் எத்தகையது என்பதை நம்மால் தெரிந்து கொள்ள முடியாது; ஆனால், நமது பங்கைச் சரிவர நிறைவேற்ற நம்மால் முடியும். ஆதலால், எது முடியும் என்று நமக்குத் தெரியுமோ, அதைச் செய்யவேண்டும்; அதற்கான உறுதி நம்மிடம் இருக்க வேண்டும்.

உத்தரவுகள் நியாயத்திற்கு ஏற்றவகையில் இருக்காவிடினும்கூட, அவற்றை உற்சாகத்துடன் ஏற்று நடத்த வேண்டும் என்பதுதான் உண்மையான ஒழுங்குக் கட்டுப்பாடு.

ஒரு தொண்டர் தமது தலைவரைத் தெரிந்தெடுக்கும்போது, விவேகத்தைப் பயன்படுத்திக் கொள்கிருர்; ஆனல் ஒரு தடவை தேர்ந்தெடுத்துவிட்டால், அதன்பிறகு ஒவ்வொரு உத்தரவையும் ஆராய்ந்து கொண்டிருக்க முடியாது.

பெரும் புயல் -- பெருவெள்ளம் ஆகியவற்றுக்கும், அலைதாங்கி -- அணைக்கட்டுக்கள் ஆகியவற்றுக்கும் இடையே எத்தகைய தொடர்பு உள்ளதோ அத்தகைய தொடர்பு குழப்பத்துக்கும் ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கும் இடையே இருக்கிறது.

ஓர் ஆழ்ந்த சனநாயகவாதி ஒழுங்குக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை கொண்டவராகத்தான் இருக்க முடியும். மனிதனின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயலாற்றும் பழக்கம் கொண்டவருக்குத்தான் சனநாயகக் கொள்கை வர முடியும். சனநாயகத்திற்காக உழைக்க விரும்புவோர், சனநாயகத்திற்ககாக இந்த சோதனையில் வெற்றி காண வேண்டும்.

சமூகத்தின் நலனுக்காக சமூகக் கட்டுப்பாடுக்குப் பணிந்து நடப்பதால் தனி நபரும் வளம் பெறுவார் -- சமூகமும் வளம் பெறும்.

வெற்றியையே குறிக்கோளாகக் கொள்வீர்!

சென்னை, அக். 16—

"1967 தேர்தலுக்கு முன்பு அரிசிக்காக மக்கள் பட்ட அவதியை யாரும் மறந்திருக்க முடியாது!

"அறிஞர் அண்ணா அவர்கள், 'இனியும் மக்கள் அவதிப்பட விடக் கூடாது' என்று எண்ணி-கூட்டணி அமைத்து-காங்கிரசு ஆட்சியை அகற்றினர்!

"அத்துடன் இல்லாமல், பதவி ஏற்ற சில நாட்களுக்குள், படி அரிசித் திட்டத்தைக்கொண்டு வந்தார்!

"அறிஞர் அண்ணா அவர்கள் நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு தரக்கூடிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்; ஆகவே நாம் அனைவரும கழகத்திற்குப் பெருமிதத்திற்குரிய வகையில் வெற்றிப் பட்டியலைத் தேடித் தர உழைக்க வேண்டும்---அண்ணா உளம் மகிழ நாம், கழகத்திற்கு வெற்றி தேடித் தரவேண்டும்; கழக வெற்றி தான், குறிக்கோளாக இருக்க வேண்டும்!

"ஆட்களைக்கூட பார்க்க வேண்டியதில்லை! நமக்காகப் பாடுபடுவது கழகம் ஒன்றே! நமது சின்னம் உதய சூரியன்! இதை நினைவில் வைத்து, கழக வேட்பாளரை வெற்றி பெறச் செய்வது நமது கடமையாகும்."

---ஏ. வி. பி. ஆசைத்தம்பி

(78-வது வட்டத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்)

'பாத யாத்திரை' செல்ல வேண்டிய இடம் எது?

சென்னை, அக். 16—

"தமிழ்நாடு காங்கிரசுக்காரர்கள், இங்கு மட்டும் 'பாத யாத்திரை' நடத்துகிறார்கள்; மற்ற மாநிலங்களில் ஏன் நடத்த வில்லை?---இங்கு மாநகராட்சித் தேர்தல் வருகிறது---எனவே, 'பாத யாத்திரை' நடைபெறுகிறது!

"பதவி போன ஆத்திரம்தான், 'பாத யாத்திரை'யில் வந்து நிற்கிறது --- இன்னும் எதெதில் போய் நிற்குமோ தெரியவில்லை!

"'பாத யாத்திரை' நடத்துபவர்கள், பாண்டிச்சேரிக்கும் --- பெங்களூருக்கும் -- ஆந்திராவுக்கும் அல்லவா போய் இருக்கவேண்டும்? அங்கு தானே, காந்தியாரின் உயிர்க் கொள்கைக்கு எதிராகக் கள்ளுக்கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன? அதை விட்டு விட்டு இங்கு ஏன் பாத யாத்திரை?"

---மு. கருணாநிதி

(5-வது வட்ட தேர்தல் கூட்டத்தில்)

குடிசை வாழ்வோர் மேம்பாட்டுத் திட்ட துவக்கவிழா

தமிழக வீட்டு வசதி வாரியத்தைச் சார்ந்த தாண்டவராயசத்திரம் குடிசை வாழ்வோர் மேம்பாட்டுத் திட்டத்தை சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் தலைமையில் செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து துவக்கிவைப்பார்.

அவதூறு செய்தனர் அன்று---வாக்குக்கேட்க வருகின்றனர் இன்று!

பட்டினத்து வாக்காளர் பெருமக்களே---காங்கிரசாருக்குப் பக்குவமாகப் பதில் கூறிடுவீர்

சென்னை, அக். 16—

"'மாநகராட்சித் தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும்' என்று காங்கிரசுக்காரர்கள் பெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்! நமக்கு இருக்கும் ஆச்சரியமெல்லாம், எந்த முகத்தை வைத்துக்கொண்டு அவர்கள் சென்னை மக்களைச் சந்திக்க வருகிறார்கள் என்பதுதான்!

"இன்று சென்னை மக்களைச் சந்தித்து ஓட்டுக் கேட்க வரும் இதே காங்கிரசுக்காரர்கள், சென்னை மக்களைப்பற்றி என்ன என்ன கூறினர்கள்---தென் சென்னை இடைத் தேர்தலின் போது காங்கிரசுக் கட்சியின் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் பேசினர்—

"சென்ற தேர்தலின்போது போதையில் இருந்த காரணத்தால், சென்னை மக்கள், தி. மு. கழகத்திற்கு ஓட்டுப் போட்டார்கள்; இப்போது மக்கள போதை தெளிந்துவிட்டார்கள்" என்றார்!

"1959-ம் ஆண்டில் முதன்முறையாக கழகம் மாநகராட்சியைக் கைப்பற்றியபோது காமராசர் அவர்கள்—

"கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் எல்லாம் கழகத்திற்கு ஓட்டுப் போட்டுவிட்டார்கள்" என்றார்.

"காங்கிரசுக்காரர்கள் சென்னை 'மக்களைக் குறைகூறியது இதோடு நின்றுவிடவில்லை; சங்ககிரியில் இடைத் தேர்தல் நடைபெற்றபோது அங்கு அவர்கள் செய்த பிரச்சாரம் எல்லாம், 'சென்னைப் பட்டினத்துக்கு மட்டும் படி அரிசியா? பட்டிக்காட்டு மக்களுக்கு இல்லையா?' என்பதுதான்!

"அப்படி அவர்கள் செய்த பிரச்சாரத்தில் சென்னை மக்களை அவமதித்து வெளியிட்ட ஒரு துண்டறிக்கையில்—

"பாடுபடுபவன் — பட்டிக்காட்டுக்காரன்! உண்டு உறங்கி சுகிப்பவர்கள்--பட்டினத்தில் இருப்பவர்கள்! அவர்களுக்குப் படி அரிசி! இதுதான் தி. மு. கழக அரசு சாதனை!"

என்று எழுதிக் காட்டினர்கள். பட்டினத்தில் உள்ளவர்கள் எல்லாம் வேலையே செய்யாதவர்களா? உண்டு உறங்கி சுகிப்பவர்கள்தானா?

"நகரத்தில் உள்ளவர்கள், வாங்கி உண்பவர்கள்; தாங்களாக உற்பத்தி செய்துகொள்ள முடியாதவர்கள்; அவர்களுக்குக் குறைந்த விலையில் உணவு வழங்கிட வேண்டும் என்பதற்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள், படி அரிசித் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள்.

"இதையெல்லாம் அறிந்திருந்தும், சென்னை மக்களை அவமதிப்பதுபோல் துண்டறிக்கை விட்டவர்கள் காங்கிரசுக்காரர்கள்! அந்தத் துண்டறிக்கையில் மேலும் கூறுகிறார்கள்—

"பட்டினத்தில் உள்ளவர்களுக்கு ஒரு நாள் கூலி எட்டு ரூபாயிலிருந்து பத்து ரூபாய் -- ஆனால், வேலை செயயும் நேரமோ ஆறு மணி அல்லது எட்டு மணி நேரம்தான்! பட்டிக்காட்டு விவசாயிகளுக்கு ஒருநாள் கூலி இரண்டு ரூபாய் -- இரவு பகலாக வேலை செய்கிறார்கள்! பத்து ரூபாய்க் கூலி பெறுபவர்களுக்கு நல்ல அரிசியாக ரூபாய்க்கு ஒரு படி ஏன் போடவேண்டும்?"

இப்படித் துண்டறிக்கையின் மூலம் கேட்டவர்கள் காங்கிரசுக்காரர்கள் -- இவர்கள்தான் உங்களிடம் ஓட்டுக் கேட்க வரப் போகிறார்கள் -- பக்குவமாக அவர்களுக்குப் பதில் சொல்லி அனுப்புங்கள்! தி.மு.க. -- கூட்டணியினருக்கு வெற்றி தேடித் தாருங்கள்!"

---மு. கருணாநிதி

(தேர்தல் பிரசாரக் கூட்டங்களில்)

நடக்க இருப்பவை

17--10--68

சென்னை 87-வது வட்டம்

தி. மு. க. வேட்பாளர் மு. வரதராசனை ஆதரித்துத் தேர்தல் பிரசாரம்; இரவு 8-மணிக்கு நல்லதம்பி முதலித் தெருவில்; தலைவர்: பி. பாலகோபால்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், டாக்டர் ஹண்டே எம்.எல்.ஏ., நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., பட்சி இராசகோபாலன், மற்றும் பலர்.

சென்னை 97-வது வட்டம்

அண்ணா படிப்பகச் சார்பில் கழக வேட்பாளர் அ. செல்வராசனை ஆதரித்துத் தேர்தல் பிரசாரம்; மாலை 7-மணிக்கு பீமண்ண முதலித் தெருவில்; தலைவர்: என். துரைசாமி; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, இராம. அரங்கண்ணல் எல்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.பி., வீரஜின்னு, கோ. ந. இராசன், எஸ். வி. வேலு, கோமகன், டி. தம்பித்துரை, அ. செல்வராசன்.

குருபுரம் கலைவாணர் மன்றச் சார்பில் அண்ணா மலைபுரம் 1-வது மெயின் ரோடில்; தலைவர்: நீ. சண்முகம்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் எம்.எல்.சி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., அ. செல்வராசன், கோ. ந. சண்முகம், என். துரைசாமி.

சென்னை 60-வது வட்டம்

கழக வேட்பாளர் தே. து. இராமாநுசத்தை ஆதரித்து இரவு 8-மணிக்கு சுந்தரம் பிள்ளை தெருவில்; தலைவர்: ப. குப்புசாமி; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், சிட்டிபாபு எம்.பி., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.

சென்னை 86-வது வட்டம்

கழக வேட்பாளர் ஆதிகேசவனை ஆதரித்து இரவு 8-மணிக்கு பசுதித் தெருவில்; தலைவர்: மா. வி. இளங்கோ; பேசுவோர்: ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., அப்துஸ் சமது எம்.பி., மதுரை கோவிந்தராசன் எம்.எல்.ஏ., சிட்டிபாபு எம்.பி., மாணவர் சனார்த்தனம்.

அறிவுக்கூடங்களாகச் சிறைச்சாலைகள்!

அமைச்சர் செ. மாதவன் யோசனை

கோவை, அக். 16—

"சிறைச்சாலைகளைச் சீர்திருத்தப் பள்ளிகளாக --- அறிவுக்கூடங்களாக மாற்றச் சிறை அதிகாரிகள் முயற்சி செய்யவேண்டும்.

"சமூகத்திலுள்ள பொருளாதார -- ஒழுக்கச் சீர்கேடுகளின் காரணமாகத்தான் பலர், சிறைத் தண்டனையை ஏற்க நேரிடுகிறது; எனவே அதிகாரிகள், சிறைக் கைதிகளைத் தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களைப்போல் நடத்த வேண்டும்; சிறையிலிருந்து விடுதலை பெறுவோர், சமுதாயத்தில் நல்ல நிலையை அடைவதற்கான முயற்சியில் உழைக்கவேண்டும்"

என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், கோவை மத்திய சிறையில் நடைபெற்ற சிறைச்சாலைத்துறை ஊழியர்கள் விளையாட்டுப் போட்டிக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"கைதிகளைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதைவிட, விவசாயம் -- தொழில் துறைகளில் ஈடுபடுத்தி உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்யலாம். இங்கு நல்ல முறையில் உற்பத்தி செய்யப்படுமானல், சிறைத் துறை ஊழியர்களுக்கு ஏற்ற வசதிகளை அரசு செய்யும்."

கலை நிகழ்ச்சி

சென்னை 33-வது வட்ட தி.மு.க. சார்பில் 18—10—68 மாலை 6-மணிக்கு சூளை காளத்தியப்ப முதலி தெருவில்--பி.சி. சீனிவாசன் தலைமையில் குமாரி விசயாவின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக. திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-15) [illegible]

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேலம் நகராட்சி மன்றத் தலைவர் திரு. ஆர். இராமகிருஷ்ணனுக்குக் கடிதம் எழுதியுள்ளார்; அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"அறிஞர் அண்ணாவின் 60-வது பிறந்த நாளை முன்னிட்டுத் தங்கள் நகராட்சி மன்றம் அனுப்பிய வாழ்த்துக்கும், 'விரைவில் நலம் பெற வேண்டும்' என்ற நல்லெண்ணத்துக்கும் அண்ணா அவர்கள் தமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்கச் சொன்னர்கள்.

"அண்ணா அவர்கள் இப்போது மருத்துவமனையிலிருந்து வெளிவந்து ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உடல்நிலை சீரடைந்ததும் தாயகம் திருப்புவார்கள்."

வெளியூரில் பானை கட்டியவர்கள் சென்னையிலே ஓட்டு கேட்பதா?

சென்னை, அக். 16—

"சென்னை நகர மக்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன் --- தேர்தலுக்கு முன்பு அரிசி கிடைத்ததா? 'கியூ'வில் தவமிருந்தும், 'இல்லை' என்று வரவில்லையா? இன்றைக்கு நிலைமை என்ன?

"'பருப்பு விலை என்ன ஆச்சு' என்று காங்கிரசுக்காரர்கள் கூப்பாடு போட்டார்களே---குறைந்ததா இல்லையா?

"ஒரு கோடி 20-இலட்சம் லிட்டர் பால் மலிவு விலையில் தரப்படுகிறது; இன்னும் பல சாதனைகளைச் செய்ய அண்ணாவின் அரசு திட்டமிட்டிருக்கிறது!

"காங்கிரசார் இலட்சணத்தை, நாட்டு மக்கள் அறியமாட்டார்களா? ஆட்சிக்கு வந்த 60 நாட்களுக்குள் படி அரிசித் திட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்த போது, வெளி மாவட்டங்களில் பானை கட்டியவர்கள்தானே இவர்கள்? 'நகர மக்களுக்கே எல்லாம் செய்கிறார்கள்' என்று தென்காசியிலும், சங்ககிரியிலும் கூறவில்லையா? இப்படிக் கூறியவர்களை மக்கள் மன்னிக்க முடியுமா?

"ஆகவே, இவைகளையெல்லாம் மனத்தில் கொண்டு, மாநகராட்சித் தேர்தலில் கழகம் வெற்றி பெற -- அண்ணா அவர்கள் மனம் மகிழ -- உதய சூரியன் சின்னத்தில் முத்திரையிடுங்கள் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்."

--கே. ஏ. மதியழகன்

(78-வது வட்டத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

கருநாடக மாநில

தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

"கருநாடக மாநில தி. மு. கழக அவசரச் செயற்குழுக் கூட்டம் 20—10—68 காலை 9-மணி முதல் 10-மணிக்குள் மாநிலப் பணிமனையில் நடைபெறும்; செயற்குழு உறுப்பினர்கள் தவருது கலந்துகொள்வதுடன், பகுதிச் செயலாளர்களும், பொதுக் குழு உறுப்பினர்களும், மாவட்டச் செயலாளரும் இதனையே சிறப்பு அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"ஆய்வுக்கு வரும் பொருள்:— கருநாடக ராஜ்யோத்சவா; தங்கவயல் இடைத் தேர்தல்; கழக வளர்ச்சி"

என்று கருநாடக மாநில தி. மு. க. அமைப்பாளர் தி. திராவிடமணி அறிவிக்கிறார்.

நாகரிகத்தின் உண்மைப் பொருள்!

"நாகரிகத்தின் உண்மையான பொருளைப் பார்த்தோமேயானல், அது தேவைகளைப் பெருக்குவதில் இல்லை என்பதும், தாமாகவே முன்வந்து தேவைகளைக் குறைத்துக்கொள்வதிலே இருக்கிறது என்பதும் தெரியவரும்."

—காந்தியார்